**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**

**O. S. No. 120/2019**

சாட்சி : PW-1

பெயர் : பசுமதி தேதி: 15-11-2024

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது அம்மாவிற்கும், 1ஆம் பிரதிவாதிக்கும் 1978இல் திருமணம் நடந்தது. திருமணம் நடந்த தேதி மற்றும் மாதம் எனக்கு தெரியாது. திருமணம் எந்த இடத்தில் நடந்தது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அம்மா, அப்பாவின் திருமணம் தொடர்பான புகைப்படம் மற்றும் அழைப்பிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

திருமணத்திற்கு அழைப்பிதழ் அச்சடிக்கப்படவில்லை. புகைப்படமும் எடுக்கப்படவில்லை. நான் பிறந்ததேதி எனக்கு நினைவில்லை. ஆனால் பிறந்தது எனது பாட்டி வீடு சிந்தாமணியூர் ஆகும். நான் எனது பிறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நானும், 1ஆம் பிரதிவாதியும் சேர்ந்து புகைப்படம் எடுத்துள்ளோமா என்றால் இல்லை. நான் பிறந்தது முதல் தாவா சொத்தில் நானும், எனது அம்மாவும் இருந்ததில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் பாட்டி வீட்டில் தான் இருந்தோம். எனது பாட்டி வீடு சிந்தாமணியூர் மேட்டுர்தாலுக்காவில் உள்ளது. தாவா சொத்து ஓமலூர் தாலுக்காவில்

உள்ளது. எனக்கும், எனது அம்மாவிற்கும் வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவை தாவா சொத்து விலாசத்தில் இல்லை என்று சொன்னால் சரிதான்.

1ஆம் பிரதிவாதியின் பெயர் எங்களது குடும்ப அட்டையில் உள்ளது. அந்த குடும்ப அட்டையை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சிந்தாமணியூரில் தான் படித்தேன். நான் தாக்கல் செய்துள்ள பள்ளிமாற்று சான்றிதழ் மற்றும் ஆதார் அட்டடையில் குறிப்பிடப்பட்டுள்ள தங்கராசு 1ஆம் பிரதிவாதி அல்ல என்று சொன்னால் சரியல்ல.

1வது பிரதிவாதி தான் எனது அப்பா என்பதை காட்டக்கூடிய வகையில் நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதி எனது அப்பா இல்லாத காரணத்தினால் தான் அது தொடர்பான ஆவங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் 1வது பிரதிவாதி தாத்தா மதுரகாளி கவுண்டருக்கு 27.09.1944 கிரய பத்திரப்படி சுயமாக பத்தியப்பட்டது என்றால் சரிதான். மதுரகாளிகவுண்டர் 1959 இல் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மதுரகாளிகவுண்டருக்கு கொழந்தையன்ன கவுண்டர் மற்றும் பெருமாள் கவுண்டர் ஆகியோர் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான்.

மதுரகாளிகவுண்டர் இறந்த பின்பு 1944இல் கிரயம் பெற்ற சொத்துக்கள் அவரது வாரிசுகள் கொழந்தையன்ன கவுண்டர் மற்றும் பெருமாள் கவுண்டர் ஆகியோருக்கு சுயமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

மேற்படி கொழந்தையன்ன கவுண்டர் மற்றும் பெருமாள் கவுண்டர் ஆகியோர் 04.04.1960 இல் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்றும், அதில் எ அட்டவணை சொத்து கொழந்தையன்ன கவுண்டருக்கும், பி அட்டவணை பெருமாள் கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பெருமாள் கவுண்டர் பி அட்டவணை சொத்தை 09.01.1962 இல் ஒரு ராக்கியன்னகவுண்டருக்கு விற்பனை செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

பி அட்டவணை சொத்தை கொழந்தையன்ன கவுண்டர் ராக்கியன்ன கவுண்டரிடமிருந்து 30.04.1963 இல் கிரயம் பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். அதனால் மொத்தம் 2 ஏக்கர் 22 செண்ட் நிலம் முழுவதும் கொழந்தையன்ன கவுண்டரின் சுயசொத்துக்கள் என்று சொன்னால் சரிதான்.

கொழந்தையன்ன கவுண்டர் இறந்த பின்பு அவரது வாரிசுகள் 02.11.2015 இல் பாகப்பிரிவினை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் தான் தாவா சொத்து 1வது பிரதிவாதிக்கு பிரித்து கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு வீட்டுவரி, மின்இணைப்பு, பட்டா மற்றும் இதர வருவாய் ஆவணங்கள் 1வது பிரதிவாதி பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

நான் 1வது பிரதிவாதியின் மகள் இல்லை என்பதால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா

சொத்து 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிசொத்து என்பதால் அந்த சொத்தில் நான் எந்த உரிமையும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல.

நான் எந்த காலத்திலும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பா பாகம் கொடுத்து வந்தார். எனது அப்பா சொத்திலிருந்து வரும் பொருட்களில் பாகம் பிரித்து கொடுத்தார் என்று பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா சொத்திலிருந்து வரும் பொருட்களில் பாகம் பிரித்து கொடுத்ததிற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை.

தாவா சொத்து பூர்வீக சொத்து என்று நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்தில் எந்த காலத்திலும் இல்லாததால் இந்த தாவா காலவரைசட்டத்தால் பாதிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. டி.என்.ஏ பரிசோதனை செய்ய வேண்டுமென்று நான் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நான் 1வது பிரதிவாதியின் மகள் என்று அனுமானித்து தள்ளுபடி செய்துவிட்டதாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

1வது பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் பொய் சங்கதிகளை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/(L. Kalaivani)
III Additional District Judge,
Salem.